# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (22.06.2024 முதல் 26.06.2024)

**அறிக்கை எண் 050/2024** **தேதி.21.06.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 18.06.24 முதல் 20.06.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 24°C to 25°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 61 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17-19 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (18.06.2024 முதல் 20.06.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 26.06.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18/06 | 19/06 | 20/06 | தேதி | நாள்-1 22/06 | நாள்-2 23/06 | நாள்-3 24/06 | நாள்-4 25/06 | நாள்-5 26/06 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 25 | 26 | 29 | 6 | 10 |
| 35 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 33 | 31 | 31 | 30 |
| 25 | 24 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 21 | 20 | 20 | 20 |
| 6 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 6 | 7 |
| 70 | 83 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 80 | 80 |
| 61 | 74 | 76 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 70 | 50 | 60 | 50 |
| 17 | 18 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 24 | 24 | 24 | 24 | 26 |
| 250 | 230 | 230 | காற்று வீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (22.06.2024 முதல் 26.06.2024)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 30°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்று மணிக்கு 24-26 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **22-06-2024** | 19.0 | 9.0 | 9.0 | 12.0 | 12.0 | 9.0 | 6.0 | 18.0 | 18.0 | 22.0 | 9.0 | 19.0 | 6.0 |
| **23-06-2024** | 25.0 | 26.0 | 34.0 | 21.0 | 26.0 | 35.0 | 20.0 | 27.0 | 25.0 | 24.0 | 37.0 | 23.0 | 17.0 |
| **24-06-2024** | 28.0 | 28.0 | 36.0 | 24.0 | 29.0 | 37.0 | 22.0 | 30.0 | 28.0 | 27.0 | 39.0 | 26.0 | 19.0 |
| **25-06-2024** | 6.0 | 14.0 | 17.0 | 7.0 | 11.0 | 19.0 | 12.0 | 8.0 | 7.0 | 4.0 | 20.0 | 5.0 | 8.0 |
| **26-06-2024** | 11.0 | 15.0 | 23.0 | 10.0 | 15.0 | 21.0 | 11.0 | 13.0 | 12.0 | 8.0 | 24.0 | 9.0 | 9.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் ஒரு சில இடங்களில் கனத்த மழை எதிர்பார்க்கப்படுகிறது. ஆதலால் தகுந்த வடிகால் வசதி செய்யவும்.<br>காற்றின் வேகமானது மணிக்கு 10 - 26 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும். |
| தக்காளி | நடவு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி தக்காளி நடவு செய்ய இதுவே தகுந்த தருணம். (மழை இல்லாத சமயங்களில்) |
| தென்னை | | தென்மேற்கு பருவமழை துவங்கி இருப்பதால் மரம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். மேலும் தென்னைக்கு உரமிட மரத்தைச்சுற்றி 1.8 மீட்டர் தள்ளி அரைவட்ட வடிவில் குழி எடுக்கவும். |
| கால்நடைகள் | | கடந்த மழையில் முளைத்த புதிய புற்களை மேயவிடுவதை தவிர்ப்பதனால் கால்நடைகளில் குடற்புழுக்களின் தாக்கத்தினை தவிர்க்கலாம்.<br>வேகமான காற்றினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சினைப்போக்க கால்நடைகளுக்கு போதிய குளிர்ந்த நீர் அளிக்கவும். |

**குறுஞ்செய்தி**

- மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் கனத்த மழை எதிர்பார்க்கப்படுவதால் தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

(GKMS)